துங்கபுரம் சிறுநில விவசாயச் சங்கத் தலைவரிடம் இருந்து ஒரு மனுவும் வரவில்லை என்று வருவாய் வாரியம் (உணவு உற்பத்தி), மற்றும் வேளாண்மை இயக்குநர் சொல்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட மனுவின் நகல் ஒன்றை அனுப்பித்தர ஏற்பாடு செய்தால் அதனை அரசு பரிசிலனை செய்யும்.

பலாப்பழம் ஏற்றுமதி

*585. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பலாச்சுளையைப் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

அரசு எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை

*586. **வினா—திரு. கே. ஏ; வகாப் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் மவுண்ட் ரோட் அரசாங்க எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது லாபத்தில் செயல்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) சென்னை அண்ணா சாலை (மவுண்ட் ரோட்) அரசாங்க எஸ்டேட்டில் காய்கறிப் பண்ணை ஒன்று 1968-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(இ) விவசாயத்திற்கு ஏற்ற நீர் இவ்விடத்தில் கிடைப்பதில் ஏற்பட்ட கஷ்டங்கள் காரணமாக 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் இக் காய்கறிப் பண்ணை மூடப்பட்டது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அப்படி அமைக்கப்பட்ட அந்தக் காய்கறிப் பண்ணையில் ஸ்ப்ரிங் மூலம் நீர் பாய்ச்சும் முறை கையாளப்பட்டதே, ஆராய்ச்சி மூலம் அந்த முறையாவது பயனுடையதாகக் கருதப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பண்ணையில் நீர் இறைக்க ஸ்ப்ரிங்கிளிங் முறை கையாளப்பட்டது. ஸ்ப்ரிங்கிங் முறைதான் வெற்றி பெற்றது. பண்ணை வெற்றி பெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கவர்ன்மெண்டு எஸ்டேட்டுக்குள் ஒரு காய்கறிக்கடை இருக்கிறது. அங்கே வாடி வதங்கிப்போன காய்கறிகள்தான் இருக்கின்றன. இப்படி ஒரு கடை அங்கே